# "Uriyar Pirarku" - Games, Prize Distribution and Culturals for kids from 4 Orphanages

| Name of the Activity | Organized by | Date of event | Number of Students |
|---|---|---|---|
| **Uriyar Pirarku** (English Translation: ***What we possess is meant for service to Others***) | Muthamizh Mandram and Ilamparavai, CIT<br><br>(By Tamil Literary Forum) | 17.03.2024 | 50 |




***Tamil Forum Volunteers at the orphanage to donate the collected items and to bring the children to Coimbatore Institute of Technology (CIT)***




***Tamil Forum Volunteers at the orphanage to donate the collected items and to bring the children to Coimbatore Institute of Technology (CIT)***



***Kids from the orphanages at Coimbatore Institute of Technology for a day of games and cultural activities***

## Abstract

The event titled "Urivar Pirarku" was successfully organized at our college on 17/03/2024. During this event, the Tamil Literary Forum of our college hosted children from four different orphanages .

At the "Urivar Pirarku" event, the Tamil Literary Forum of our college was honored to have the Chief Guest deliver an inaugural speech emphasizing the significance of the event and the role of the community in social responsibility. In his speech, he highlighted the community's contribution to the development of the guests.

Following the inauguration, a cultural program was performed, which included the singing of the Tamil Mother song. The program was attended by all the children. After the cultural performances, lunch was served to the children in the college dining hall, with arrangements made by the college's catering team.

After lunch, awards were presented to the children of the cultural events. These awards were intended to recognize and encourage the participants. The funds for the event were raised through contributions from students and faculty members, which were used to provide necessary supplies to the 4 orphanages.

The event concluded with a vote of thanks, where the Tamil Literary Forum expressed gratitude to everyone who contributed to the success of the event. The "Urivar Pirarku" event was a successful occasion that provided recognition and appreciation to the children. Additionally, several artistic performances and exhibitions were conducted, including painting competitions and cultural performances, showcasing the talents of the participants. The Tamil Literary Forum members and organizers ensured a memorable and impactful experience for all attendees.

College transportation was used to pick up and drop the children to and from the orphanages safely.

**கோவை தொழில்நுட்பக் கல்லூரி, கோவை – 641 014**

**முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை**

# நிகழ்வு அறிக்கை

# (2023-2024)

**நாள்** : 17/03/2024

**நேரம்**: **காலை** 9:00 முதல் மாலை 5:00 வரை

இடம்: ஆடிட்டோரியம்

பங்கேற்பாளர்கள்: 50

"உரியர் பிறர்க்கு" என்ற மாபெரும் விழா, 17/03/2024 அன்று நம் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் நம் கல்லூரியின் முத்தமிழ் மன்றம், 4 ஆசிரமங்களில் இருந்து சிறுவர் சிறுமியர்களை அழைத்து வந்தது. இச்சிறுவர் சிறுமியர்களை அழைத்து வர கல்லூரி பேருந்துகள் பயன்படுத்தப்பட்டன.

முதலில், முத்தமிழ் மன்ற ஆலோசகர், பேராசிரியர் ________ அவர்கள் நிகழ்வைத் தொடங்கி, நிகழ்வின் முக்கியத்துவம் மற்றும் சமூக பொறுப்பின் இன்றியமையாமையை பற்றி உரையாற்றினார். அவரது உரையில், சிறுவர் சிறுமியர்களின் வளர்ச்சியில் சமூகத்தின் பங்கு குறித்து பேசப்பட்டது.

அதன் பின், நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் வரவேற்புப் நடனம் நிகழ்த்தப்பட்டது, பின்னர் தமிழ் தாய் வாழ்த்து பாடப்பட்டது. குழந்தைகளுக்கு வரவேற்பு உரை வழங்கப்பட்டது, இதனால் அவர்கள் இந்நிகழ்வின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது.

அதனைத் தொடர்ந்து, குழந்தைகளின் உற்சாகத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகள் மற்றும் விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன. இவற்றில் ஓவியப்போட்டி, விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் குழந்தைகள் உற்சாகத்துடன் பங்கேற்று தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். முத்தமிழ் மன்ற உறுப்பினர்கள், குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டு விடுவிப்பாளர்கள், குழந்தைகளை

போட்டிகள் மற்றும் விளையாட்டுகள் நடைபெறும் இடங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

போட்டிகள் முடிந்த பிறகு, குழந்தைகளுக்கு கல்லூரி மையத்தில் ஆரோக்கியமான மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த உணவின் ஏற்பாட்டை கல்லூரியின் உணவக குழுவினர் சீரிய முறையில் செய்திருந்தனர்.

மதிய உணவிற்கு பின், போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இப்பரிசுகள் குழந்தைகளின் உற்சாகத்தை மேலும் உயர்த்தின.






இந்த நிகழ்வை முன்னிட்டு, ஆசிரமங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து நிதி சேகரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட நிதி மூலம், நம் கல்லூரியின் முத்தமிழ் மன்றம், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரமங்களுக்காக விளையாட்டு பொருட்கள், அரிசி மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கியது.








பரிசுகள் வழங்கப்பட்ட பின், முத்தமிழ் மன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் தொண்டு விடுவிப்பாளர்கள் குழந்தைகளை மீண்டும் அவர்களின் ஆசிரமங்களுக்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குழந்தைகள் கல்லூரி பேருந்துகளில் அழைத்து செல்லப்பட்டனர்.

நிகழ்வு முடிவில் நன்றி உரை நிகழ்த்தப்பட்டது, இதில் விழாவின் வெற்றிக்கு பங்களித்த அனைவருக்கும் முத்தமிழ் மன்றம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

இந்நிகழ்வு சிறப்பாக முடிவடைந்து "உரியர் பிறர்க்கு" விழா இனிதே நிறைவுற்றது.